தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**6 வயதுப்பிரிவு**
(01.01.2018 – 31.12.2018 வரையில் பிறந்தோர்)

## சிறுத்தை

சிறுத்தை என்று சொல்லும் போதே எனக்குள் வேகம் பிறக்கிறது. துல்லியமான கேட்டல் திறனும் கூர்மையான பார்வைப் புலனும் வேட்டைத் தந்திரமும் நிறைந்த சிறுத்தை தமிழீழத்தின் தேசிய விலங்கு.

தமிழீழத்தில் வாழும் சிறுத்தைகள் மஞ்சள் உடலில் கறுப்புப் புள்ளிகளைக் கொண்டவை. இவ்வகைச் சிறுத்தை தமிழீழத்திற்குரிய தனித்தன்மை வாய்ந்த விலங்காகும்.

அதனாலேயே, சிறுத்தையைத் தலைவர் மாமா தமிழீழத்தின் தேசிய விலங்காக அறிவித்தார். இன்று எங்கள் தாயகத்தில் பல்லுக்காகவும் தோலுக்காகவும் சிறுத்தைகள் பெருமளவில் வேட்டையாடப்படுகின்றன. அதனால், அவை அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

அவற்றைக் காக்க வேண்டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. இலக்கைத் துரத்திச் சென்று வேட்டையாடும் சிறுத்தையைப் போல் நாமும் எமது இலக்கை அடைவதற்கு விரைந்து செயற்படுவோம்.

நன்றி,

வணக்கம்.